மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஹட்கோ மூலம் வழங்கப்படும் லோன் குறித்து ஜனவரி மாதம் 27-ந் தேதி கவர்ன்மென்ட் ஆர்டர் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இதுவரையிலும் அது சொஸைட்டி மூலம் கொடுக்கப்படவில்லை. கூடிய சீக்கிரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: தலைவர் அவர்களே, கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பள்ளத்தாக்கில் மழை பெய்தாலும் சரி வருசநாட்டுப் பகுதியில் மழை பெய்தாலும் சரி எங்கே மழை பெய்தாலும் இந்த நிலக்கோட்டை தொகுதி ஆண்டுதோறும் புயலாலும் வெள்ளத்தாலும் அடித்துச் செல்லப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட அங்கே வந்து பார்த்திருக்கிறீர்கள். எனவே, கன்னியாகுமரிக்குக் கொடுக்கக்கூடிய பண உதவிகள் போன்று எங்கெங்கெல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறதோ நிலக்கோட்டை போன்ற வறண்ட பகுதியிலே பாதிக்கப்பட்ட வீடிழந்த குடும்பங்களுக்கு இந்த கடன் உதவி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18,000 குடும்பங்கள் என்பது தமிழகத்திலே தென் மாவட்டங்களில் எந்தெந்த பகுதிகளிலே புயல் வெள்ளத்தால் 1992-93 ஆண்டுகளில் பாதிக்கப்பட்டு வீடிழந்தார்களோ அவர்களுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

11—

தரமான பட்டு உற்பத்தி முட்டைகள் கிடைக்க நடவடிக்கை

*24534—திரு. கே. ஏ. மனோகரன்:

1995 மார்ச் 15]

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில், பட்டு வளர்ப்போர் சமீபகாலமாக கலப்பின முட்டையின் தரம் குறைந்துள்ளதால், பாதிக்கப்பட்டுள்ளதைத் தடுக்க தனியார் முட்டை வித்தகங்களிலும், அரசு முட்டை வித்தகங்களிலும் தரமான பட்டு உற்பத்தி முட்டைகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) தரமில்லாத முட்டைகளை விற்கும் தனியார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தனியார் முட்டை வித்தகங்களிலும், அரசு முட்டை வித்தகங்களிலும் தரமான முட்டைகளே தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. ஏ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்தக் கலப்பின முட்டைகளிலே சில வியாதிகள் வந்ததன் காரணமாக பல்வேறு பகுதிகளிலே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். உதாரணமாக ஃபெப்ரின் என்ற வியாதி அந்த முட்டையிலே இருக்கிற காரணத்தினாலே பல்வேறு பொருளாதாரச் சேதங்கள் எல்லாம் ஏற்பட்டு பல்வேறு விவசாயிகள் இன்றைக்கு அந்த பட்டு முட்டை வளர்ப்பதை விட்டுவிட்டார்கள். ஆகவே அதை மாற்றி நல்ல முறையிலே தரமான முட்டைகளை விற்பதற்கு அரசு முன்வருமா என அறிய அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே அம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாக இங்கு தகவல் இல்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு முட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன. அரசு பட்டு வித்தகத்திற்கும், தனியார் பட்டு வித்தகத்திற்கும், தேன்கனிகோட்டையில் உள்ள விதை பட்டு கூடு அங்காடியில் நோயற்ற உள்நாட்டு பட்டுக் கூடுகளையே வாங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல வெளிநாட்டின் பட்டுக் கூடுகளும் தரமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுக் கூடுகளை விநியோகிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பட்டு வித்தகங்களில்

தாங்கள் வாங்கிக் கொண்டு வரும் உள்நாட்டு வித்துக் கூடுகளையும் வெளிநாட்டு வித்துக் கூடுகளையும் துணை இயக்குநர் ஓசூர் மற்றும் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் அல்லது ஆய்வாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு தொகுப்பினையும் நுண்ணோக்கியில் பரிசோதனை செய்து தரமான பட்டுக் கூடுகளே முட்டை தயாரிக்க அரசு மற்றும் தனியார் வித்தகங்களுக்கு உபயோகிக்கப்படுகிறது. தனியார் மற்றும் அரசு வித்தகங்களில் நோய் கண்டுபிடிக்க தேவைப்படும் சிறப்பான இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு அதன் மூலம் சோதனை செய்யப்படுவதை பிப்ரவரி 1994-ல் உலக வங்கிக் குழு தனது ஆய்வில் இதனை பாராட்டியுள்ளது. அதனை தவிர்த்து மத்திய பட்டு வாரியம் ஒவ்வொரு காலாண்டும் விதைப் பகுதி தனியார் மற்றும் அரசு வித்தகங்கள் மற்றும் பண்ணைகளில் ஆய்வு மேற்கொண்டு நோய் இல்லை என்று தெரிவித்துள்ளார்கள். ஆகவே இது தவறான தகவல் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சில பாதிக்கப்பட்ட முட்டையை வளர்ப்பதனாலே 30-ஆவது நாளிலே அந்த முட்டை கூடு கட்டுகின்ற நேரத்திலே அதிலே உருண்டை கட்டி அதிலே சரியான முறையிலே சில்க் நூல்கள் எல்லாம் வரவில்லை. அதேபோல பாலும் பிடித்து அந்த முட்டைகளிலே சரியான முறையிலே வளர்ச்சி இல்லை. ஆகவே இதில் தனிக் கவனம் கொண்டு ஆராய்ந்து அந்தப் பகுதியிலே இந்த மாதிரி குறைகள் எல்லாம் ஏற்படாத வண்ணம் முயற்சி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாதிரி குறைகள் இல்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன். அதற்காக ஏற்கனவே சொன்னபடி தனியார் மற்றும் அரசு வித்தகம் மற்றும் பண்ணையில் ஆய்வு மேற்கொண்டு நோய் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். இதைப்பற்றி பாராட்டியும் உள்ளார்கள். ஆகையால் இந்த மாதிரியான ஒரு தகவல் அரசுக்கு இதுவரை இல்லை.

முற்பகல் 10-40

HON. SPEAKER: Thiru M. Venkatarama Reddy.

THIRU M. VENKATARAMA REDDY: Hon. Speaker Sir, in Hosur and Thenkanikottai taluks the Government is owning several silk farms and in all the silk farms especially in Collitis farm having an extent of 800 acres, local indigenous varieties are used. But they are not successful.

1995 மார்ச் 15]

On the other hand in adjacent Karnataka, Bivoltin varities are used. They are fetching very good yield and also high prices in the market. The weather conditions in Hosur and Thenkanikottai and adjoining Karnataka are the same. I would like to know whether the Government would come forward to introduce Bivoltin variety which has got a very good market and also yarn price.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பைவோல்டின் முறையைப் பற்றி நாம் கூட இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதற்காக இப்போது தனித் திட்டங்களும் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

12—

பெரணமல்லூர் பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

*38716—**திரு. ஆ. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை பேரூராட்சியின் நான்கு சாலை சந்திப்பு (ஆரணி-வந்தவாசி, வாழபந்தல்) இடத்திற்கு மாற்றி, கட்டிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் நிதி நிலைமை முன்னேற்றம் அடையும் தருவாயில் பேரூராட்சியின் நான்கு எல்லைகள் சந்திக்கும் இடத்தில், புறம்போக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு இருந்தால் நிலம் வாங்கி கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும்.